Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருடிய (1889) ஆவணி மாதம் 28ஆந் திகதி ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத் - ௬௨] யாழ்ப்பாணம்:- கரஞு ஆடிமீ ௮௨ செவ்வாய்க்கிழமை (24 ஜூலை 1951) [இல் - ௬௧]

உ

## தோத்திரம்

ஏழைக்குகந்த பாகத்துகண்பர் இளநீர்சுமந்த குலைசூழ்
தாழைப்பொதும்பர் மதுரைக்குளாடு சரணாரவிந்த நினைவார்
பேழைத்தனங்கள் மூடித்திறந்து பெருமைத்தனங்கள் சிறிதாம்
வாழைக்குறங்கின் மாழைக்கருங்கண் மடவார்தமாய மிலரே.

மீனுக்ஷியம்மையாருக்கு விருப்போடு இடப்பாகத்தை யுதவிய அருளோடு கூடியவரும், இளநீர் செறிந்த குலைகள் சேர்ந்துள்ள தென்னந் தோப்பையுடைய மதுரைத் திருப்பதியின் கண்ணே 'வெள்ளியம்பலத்தில் ஆனந்தத் தாண்டவஞ் செய்கின்றவருமாகிய (நடராசப் பெருமானுடைய) திருவடித்தாமரைகளைத் தியானிப்பவர்கள், பெரிய தனங்களை மூடியுந் திறந்தும் பெருந்தன்மை குறைந்துமுள்ளவாழைத்தண்டு போன்ற தொடைகளையுடையவர்களும் அழகிய கரிய கண்களை யுடையவர்களுமாகிய கணிகையர்களது மோகமில்லாதவர் என்பது பொருள்.

ஏழை இங்கே மீனுக்ஷியம்மையார்; தாழைப்பொதும்பர் - தென்னந்தோப்பு; பேழைத்தனங்கள் = பேழ்தை தனங்கள் - பெரிய அழகிய தனங்கள்; பெருமைத்தனங்கள் சிறிதாம் - பெருந்தன்மைகள் அற்பமாகவுடைய (இல்லாத); குறங்கு - தொடை; மாழை - அழகு; மதுரைப்பெருமானுடைய திருவடிகளைச் சிந்திப்பவர்கள் மாதர் மயக்கத்தில் அகப்படார் என்றபடி.
(93)

## யாழ்ப்பாணம் நகரசபை

இந் நகரசபைக்கூட்டஞ் சென்ற வாரங் கூடியபோது பின்வரும் பிரதான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன; யாழ்ப்பாணக் கச்சேரிக் கணித்தாயுள்ள பழைய பூந்தோட்டத்தின் மேற்குப் பாகம் பயனின்றிச் செடியோடு கூடியதாய்ச் சும்மா கிடப்பதால் அந்த நிலத்தை விளையாட்டு மூன்றிலாகவும் மக்கள் சஞ்சரிக்கக்கூடிய நிலமாகவும் உபயோகித்தற்கு அரசினர் அநுமதி தரல் வேண்டுமெனவும், அப்படி அநுமதிக்கும் பட்சத்தில் அந் நிலத்தற்காகிய நிபந்தனைகளைச் செய்து தோனளவாமெனவும் மேற்படி நகரசங்கம் கேட்கின்றதென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது; மேலும் கச்சேரி கட்டாரத்திலே களவுகள் சண்டை பிணக்குக்கள் அதிகப்பட்டு வருதலால், அவற்றைத் தடுப்பதற்குப் பொலிஸ் காவல் வைத்தல் வேண்டுமென மாகாணத் தலைவரைக் கேட்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## ஒருகையைச் சிதைத்ததற்கு 2500 ரூபா நஷ்டஈடு

B. M. R. "பஸ்" சமுதாயத்தாரின் பஸ் ஒன்று பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு புத்தளம் அநுராதபுரத் தெருவீதியில் ஓடியபோது, ஒரு இடையூறு நேர்ந்துவிட, அந்தப் பஸிலிருந்தவர்களுள் இருவர் மாண்டனர். பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களுள் ஜோசெப் சுலிஸ் என்பவருடைய ஒற்றைக்கை சிதைந்துபோய்விட்டது; அவர் தம் கையிழந்தமையினுல் பதினையாயிர ரூபா நஷ்டஈடு தமக்குத் தரல் வேண்டுமென்று மேற்படி பஸ் சமுதாய "மனேஜ"ருக்கு மாருக நீர்கொழும்புப் பெரிய நீதிதலத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்; நீதிபதி விசாரணை முடிந்தபின் வழக்காளிக்கு எதிரிச் சமுதாயத்தார் 2500 ரூபா நஷ்டஈடும் வழக்குச் செலவுங் கொடுத்தல்வேண்டுமெனத் தீர்ப்புச் செய்தார்.

## வழிபறி திருடர்

கதிர்காமத்திற்குப் போய்வரும் மார்க்கத்திலுள்ள பூசா என்னுமிடத்தில், சில திருடர் ஒருங்கு சேர்ந்துகொண்டு கதிர்காமத்திற்குப்போகும் மோட்டாரதங்களையும் வரும் மோட்டாரதங்களையும் வழிமறித்துத் திருடத் தலைப்பட்டார்களாம்; இந்தத் திருடர் ஒரு ரதம் வருவதைக் கண்ட மாத்திரத்தே நடுத்தெருவிற் கூடிநின்று அதனைப் போகவொட்டாது தடுத்துச் சாரதியிடத்துள்ள "சுவிச்சி" என்னுந் திறப்பைப் பறித்து வைத்துக்கொண்டு 5 ரூபா தந்தால் திறப்பைத் திருப்பித் தருவோமென்பார்களாம்; அத்தொகையைக் கொடுத்துவிட்டால் திறப்பைத் திருப்பிக் கொடுப்பார்களாம்; அந்த மார்க்கமாக ஒரு லொறி வந்தபோது, இத்திருடர்கள் லொறியைத் தடுத்துத் திறப்பைப் பிடுங்க முயன்றபோது சாரதி அதற்கு இடங்கொடாமல் லொறியை வேகமாகச் செலுத்திச் செல்வதற்கிடையில், திருடரிற் சிலர் லொறியிற் பாய்ந்தேறிக் கொண்டார்களாம்; அவர்களுளொருவன் யந்திரத்தை இயக்குஞ் சில்லைத் தான் பற்ற முயன்றபோதும், விடாமல் தடுத்து லொறியைப் பூஸாப் பொலிஸ் தானத்திற்குக் கொண்டுபோவதற்கிடையில் திருடர்கள் குதித்தோடி விட்டனராம்; பூஸாப் பொலிசாரால் அவர்களை அகப்படுத்த முடியவில்லையாம்.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

## சைவக் காப்பு

சமயங்கள் யாவற்றுள்ளும் எல்லாப் புண்ணியங்களையும் விதிப்பது சைவ சமயம் ஒன்றேயாம். சமண சமயம் புலாலுண்ணலை விலக்குவதாயினும் அது கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை மறுக்கின்றது. கடவுளுடைய இயல்பை உள்ளபடி கூறுவதும் சைவ சமயம் ஒன்றேயாம். கிறிஸ்து சமயமும், இஸ்லாம் சமயமும் கடவுள் ஒருவர் இருக்கின்றாரென்று போதித்தாலும், மறு சமயங்களிலுள்ள யாவரையும் கடவுள் மீளாநரகத்திலிட்டு வருத்துவாரென்று கூறுகின்றன. அப்படியானல் அந்தக் கடவுள் மிகவும் கொடியவராயிருத்தல் வேண்டும். சைவ சமயம் மாத்திரந்தான் எல்லா உயிர்களும் கடைசியாய் மோட்சத்திற்குப் போகுமென்று கூறுவது.

இனி, கடவுளைவழிபடுதற்குவேண்டிய முறைகளும் சைவசமயத்திலே மாத்திரம் நிறைவாயுள்ளவை. சைவ சமயத்திலே மனிதருடைய இயல்புக்கும் அறிவுக்கும் தக்கதாக கடவுளை வழிபடும்முறைகள் நான்குபடிகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. முதற்படியாக சரியையிலே நாங்கள் சிவதொண்டர், சிவனடியார்தொண்டும் சிவாலய சேவையும் செய்கின்றோம். அதற்கு மேற்பட்ட படியாகிய கிரியையிலே சிவலிங்கபூசை விதிக்கப்படுகின்றது. அதற்கு மேற்பட்டபடியாகிய யோகத்திலே சிவயோகம் விதிக்கப்படுகின்றது. இறுதிப்படியாகிய ஞானத்திலே ஆன்மாவானது சிவத்தன்மையை அடைந்து, சிவத்தை நேரே அறிந்து, சிவானந்தத்தைப் பெறுகின்றது. இந்தப்படிகள் ஒவ்வொன்றிலும் நான்குபடிகள் உள்ளன. ஆகவே கடவுளை வழிபடும் முறையானது பதினறுபடிகளாக வகுக்கப்படுகின்றது. வேறு எந்தச் சமயத்திலே கடவுள் வழிபாடானது இப்படியாக அவரவருடைய இயல்புக்குத் தக்கவாறு வகுக்கப்பட்டிருக்கின்றது?

கடவுளிலே நாங்கள் பற்றுவைக்கவும் அந்தப் பற்றை வளர்க்கவும் எங்களுக்குக் கிடைத்த வழிகளும், துணைகளும் வேறு எந்தச் சமயத்திலும் இல்லை. திருவாசகம், தேவாரம் திருப்புகழ், கந்தரலங்காரம் முதலிய பாடல்களைப் படிப்பதினுலே எங்களுடைய மனம் கசிந்து உருகிக் கடவுளிலே பற்று வைக்கின்றது. அப்படியே அறுபத்துமூன்று நாயன்மாருடைய சரித்திரமும் பட்டணத்தார், தாயுமானவர், மாணிக்கவாசகர் முதலிய சிவனடியார்களுடைய சரித்திரமும் எங்களிலே உள்ள கடவுட் பற்றை வளர்க்கின்றன. சிவபெருமானுடைய திருவைந்தெழுத்தாகிய மந்திரமும் சுப்பிரமணியப்பெருமானுடைய திருவாறெழுத்தாகிய மந்திரமும் எங்களை நல்வழிப்படுத்திக் கடவுளிடத்தே சேர்க்கத் தக்கவை. திருநீற்றை விதிப்படி அணிந்தால் அதுவும் எம்மை நல்வழிப்படுத்திக் காக்கத்தக்கது.

இப்படியாக எண்ணில்லாத சிறப்புகளைப் பொருந்திய சைவ சமயத்திலே நாம் பிறந்தும், அதன் பெருமையை உணராமையினுலே அதை நாம் பாதுகாக்கின்றோமில்லை. இந்த அருமையான சைவ சமயத்தை அற்பபொருளுக்காக எங்களுடைய ஆட்கள் விற்றுவிடுகின்றார்கள். கிறிஸ்த பள்ளிக்கூடங்களிலே ஆசிரியராதற்காக ஆயிரக்கணக்கானவர்கள் சைவசமயத்தை விற்றுவிட்டார்கள். கிறிஸ்தவக் கன்னியரால் மருண்டு சைவத்தைக் கைவிட்டவர் பலர். பொருளுக்காகவும் தொழிலுக்காகவும் நூற்றுக்கணக்கானவர்கள் புத்தராய்விட்டனர். சமீபத்திலே அநேகர் இப்படியான இழிந்த நோக்கத்தினுலே இஸ்லாம சமயத்தைச் சேர்ந்துவிட்டனர். சைவ சமயத்திலே நிலைத்து நிற்பவர்களாகிய நாங்களும் பேரளவிலேதான் சைவர்களாய் இருக்கிறோம். எங்களுடைய கோயில்களுட் பெருந்தொகையானவைகளைப் பிற சமயக்கோயில்களிலும் பார்க்க மிகவும் இழிவான நிலையில் நாம் வைத்திருக்கிறோம். எங்களுடைய கோயில்களிலே நடனப்பெண்களாகிய வேசியர்களை அழைத்து ஆட்டுவிக்கின்றோம். ஆயிரக்கணக்கானவர்கள் அவர்களைப் பார்த்தற்காகக் கோயில்களுக்குப் போகின்றார்கள். இதனுலே எங்களுடைய கோயில்கள் நாசமாகின்றன. வாண வேடிக்கை ஒலிபெருக்கி முதலியவைகளும் திருவிழாக்களுக்கு அங்கமாகி திருவிழாக்களை வீண்பொழுதுபோக்காக்குகின்றன.

எங்களுடைய சைவ ஆசாரம் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றது. ஆசௌச காலத்திலே நாங்கள் கோயிலுக்குள் போவதில்லை; ஆயினும் நித்திய ஆசௌசிகளாகிய பிறசமயத்தவருடைய வீடுகளுக்குச் சென்று அங்கே காப்பி, தேனீர் முதலியவற்றைப் பருகி ஆசௌசிகளாகின்றோம். அந்த ஆசௌசத்துடன் கூசாமல் கோயிலுக்குள் போகின்றோம்.

சைவசமயத்தைச் சீராக, அனுட்டிப்பதும் மற்றவர்களை அனுட்டிக்

(தொடர்ச்சி 4 ம் பக்கம்)

சைவப்பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம் B. A.

L K S. LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ், கரஞு ஆடி மீ அ௨ செவ்வாய்க்கிழமை


## "ஸோடா"த் தொழிற்சாலை

சென்ற சில மாசமாக இலங்கை முழுவதிலும் ஸோடா எனப்படும் உப்பின் விலையேறியதும், அதனுற் புடைவையொலிப்போர் சவர்க்காரஞ் செய்வோர் முதலானோர் கஷ்டப்பட்டதும், சவர்க்காரத்தின் விலையதிகப் பட்டதுமாகிய இவைகளை இக்குள்ள மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்; இதற்குக் காரணம் "ஸோடா" சில மாசங்களாக வேற்றூர்களிலிருந்து இலங்கையில் இறக்குமதி செய்யப்படாமையாகும்; இன்னமுஞ் ஸோடாவின் விலை குறையவில்லையெனலாம். இக்குறைகளை யுத்தேசித்துப்போலும், இலங்கையரசினர் தம்பொறுப்பில் இந் நாட்டிற்றனே ஒரு ஸோடாத் தொழிற்சாலையைத்தொடங்கிநடத்தநோக்கங்கொண்டு அதற்காகிய முயற்சிகளைச்செய்யலாயினர். ஸோடாத் தொழில் நிபுணராகிய டக்ரர் பாறிக் என்னுமொருவரை இலங்கையரசினர் பம்பாயிலிருந்து இங்கு விரைவில் அழைப்பார்களாம்; அவர் இங்கு வந்து ஸோடாத் தொழிற்சாலையமைத்தற்காகிய தானம், ஸோடா ஆக்குதற்காகிய முதற்பொருள் காரணப்பொருள் முதலியவைகளைப் பற்றி ஆராய்வாராம்; ஸோடாத் தொழிற்சாலை நிறைவேறுமானல், அது வாயிலாக நாளொன்றுக்கு நான்குதொன் நிறை கொண்ட "ஸோடா" ஆக்கமுடியுமெனவும், அப்படி ஆக்கப்படின் இலங்கை மக்களின் உபயோகத்திற்குப்போதிய ஸோடா இந்நாட்டிலேயே பெறத்தக்கதாகுமெனவும் மதிப்பிடப்படுகிறது. மேலுங் குறித்த தொகை ஸோடாவை ஆக்குதற்கு நாளொன்றிற்குஏழுரைத்தொன் நிறைகொண்ட சாமானிய உப்பு வேணுமாம்; போதிய உப்பை இலகுவிற் பெற்றுக்கொள்ளலாமென்ற நோக்கம்பற்றி, குறித்த ஸோடாத் தொழிற்சாலையை யானையிறவிலே தாபிக்கலாமென முன்பு உத்தேசிக்கப்பட்டது; ஆனல் இந்தத் தானத்திலே தாபித்தல் மந்திர சபையாருக்கு இஷ்டமில்லாமையினுல் இப்பொழுது இந்நோக்கங் கைவிடப்பட்டதாம். மின்சார அலைச் சௌகரியமுள்ளதாய், வேறுந்தொழிற்சாலைகள் சமீபத்திலுள்ளதாகிய ஒரு தானத்தைத்தெரிந்து, அத்தானத்திலேயே ஸோடாத்தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்பது அரசினருடையநோக்கமாம்.

"ஆர் குத்தினுலும் அரிசியானுற் போதும்" என்றபடி, ஸோடாத்தொழிற்சாலை இலங்கையில் எந்தப் பாகத்தில் உற்பத்தியாகி நடைபெற்ருலுங் காரியமில்லை; யாழ்ப்பாணத்திலே, வட இலங்கையிலேதான் இப்படிப்பட்ட தொழிற்சாலை ஆரம்பித்து நடைபெற வேண்டுமென்ற நியதியுமில்லை; ஆனல், எங்கே தொடங்கி நடைபெற்ருலும் நன்கு நடைபெறவேண்டுமென்பதே எங்கள் நோக்கம்; இலங்கையிலே சில ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றி நடந்து பின் மறைந்த கண்ணுடித் தொழிற்சாலை முதலியன போன்று இதனையுந் தொடங்கினுற் சோரவிடவொண்ணுது; காகிதத் தொழிற்சாலை, புடைவைத் தொழிற்சாலை, ஸோடாத் தொழிற்சாலை யென்னு மிவை இலங்கை மக்களுக்கு இன்றியமையாதனவாம்.

卐

## தமிழிலே தமிழன் கொண்ட அபிமானம்!

சென்ற வாரம் நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்திலே இலங்கைப் பரிபாலனச் செலவுத்திட்டத்தைப்பற்றிப் பேசிய போது, கோப்பாய்ப் பகுதிப் பிரதிநிதியாகிய திரு. கு. வன்னியசிங்கம் "தமிழ்ப் பிள்ளைகளைச் சிங்களம் படிக்கும்படி அதிகாரிகள் வற்புறுத்துகிருர்களேயொழிய, சிங்களப்பிள்ளைகளைத் தமிழ்ப் படிக்கும்படி வற்புறுத்துவாரெவரையுங்காணேம்" என்ற கருத்துத்தொனிக்கப் பேசினர்; அந்தச் சந்தர்ப்பத்திலே குறித்த பிரதிநிதி கொண்ட நோக்கமும் பேசிய பேச்சும் முறையானவை; ஆனல் தமிழ்மக்கள், தமிழ்ப் பெற்ருர், தமிழ் பிரதிநிதிகள், மந்திரிமார், தமிழபிமானிகள், உபாத்தியாயர்களென்றிருப்பவர்கள் தங்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தாய்மொழியாகிய தமிழைப் பயிற்றவேண்டுமென்னும் நோக்கங் கொண்டிருக்கிருர்களோ என்பதுதான் இப்பொழுது ஆசங்கைக்கு இடமாகவுள்ளது; மேலே எடுத்துக் காட்டப்பட்டவர்களெல்லாரும் தங்கள் ஆண்பிள்ளைகளாக, பெண்பிள்ளைகளாக ஆங்கிலம் படிக்கவேண்டுமென்ற நோக்கங்கொண்டவர்களாகவே காணப்படுகின்ருர்கள்; இனிமேல் அரசாங்கத்திலே சிங்கள மொழியிற் கருமம் நடக்கத் தலைப்படுமானல், இவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சிங்கள மொழியை யூட்டவேண்டுமென்ற கொள்கையுடையவர்களாவர்; ஆனல் தமிழ்மொழியைத் தங்கள் தாய்ப்பாஷையைத் தங்கள் பிள்ளைகட்குப் பிற்சந்ததியார்க்குப் புகுத்தவேண்டுமென்ற அபிமானமுடையவர்களாகக் காணப்படுகின்றிலர். இனி, இவர்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழைத் தாங்கள் அபிமானிக்கிருர்களோ என்ருல், சொல்லளவிலன்றிச் செயலளவில்எக்காலத்துஞ் செய்கின்றிலர்; தமிழும் ஆங்கிலமும் பயிற்றப்படுங் கலாசாலைகளிலே, தமிழரால் நிர்வகித்து நடத்தப்படுங் கலாசாலைகளிலே, உபாத்தியாயர்களாகவுள்ளவர்கள் தமிழ்ப் பாடத்தை அலட்சியஞ் செய்து ஆங்கிலமொழியை ஆர்வத்துடனே பயிற்றுகின்றனர்; பிள்ளைகளும் அப்படியே பயில்கின்றனர்; சில சபைகள் சங்கங்களிலே பேசும்போது தமிழ்மொழியிலேதான் பேசவேண்டும், எழுதுவன எல்லாம் தமிழிலேயே எழுதவேண்டும் என்ற நியதிகளுண்டு; ஆனல் அங்கத்தவர்கள் தமிழிலே பேசத் தொடங்கி, வாதவாதத்திலே சூடேற, ஆங்கிலத்திலே பேசவும் ஏசவுந் தலைப்படுகின்ருர்கள்; ஆனல் விஷயத்தை முடிக்கும்போது மாத்திரம் தமிழிலேயே ஞாபகமாக முடித்துவிடுகிருர்கள்; தமிழை யலட்சியஞ் செய்யுந்தமிழரைப்பற்றிய திருட்டாந்தங்கள் இன்னும் பலவுள; எடுத்துக்காட்டப்புகின் விரியும்; தமிழன் தம்மொழியில் உண்மையான அபிமானம் பாராட்டி நடந்தாலொழிய, தமிழனுக, சிங்களனுக, வேறு எப்பாஷையினனுக தமிழை ஆர்வத்துடன் கற்கப்போவதில்லையெனலாம்.

## உலகம்பலவிதக்கதை

( முற்றொடர் 14 )

### "தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

"தங்காய், அக்காலத்துப் பெண்களையும் இக்காலத்துப் பெண்களையும் பல விஷயங்களில் ஒப்பிட்டுச் சொல்ல முடியாது; அக்காலத்துப் பெண்களுட்பலர் "கொண்டான்குறிப்பறிவாள் பெண்டாட்டி" யென்ற முறையிலும் "கற்புடைய மாதர்க்குத் தாணிவேந்தே, கணவரல்லால் வேறோர் தெய்வங் கருதவுண்டோ" என்ற முறையிலும் ஒழுகி வந்தார்கள்; ஆனல் இக்காலத்துப் பெண்கள் அந்த உத்தம நிலையை மெல்ல மெல்லக் கைவிட்டுவிட்டார்கள்; அக்காலத்து மகளிருடைய வாழ்க்கை தூயது; கணவன் வழிநிற்பது; தாம வேறு தம் கணவன் வேறென்று பேதம் பாராதது; கணவன வாழ்வே தம வாழ்வு, கணவன் தாழ்வே தம தாழ்வு என்ற மேலான கொள்கையோடு கூடியது; அக்காலத்து மனையாள் தன் கணவனுக்குப்பாரமாகச் சிரமமாகக் காணப்பட்டிலளென்பது பழைய தமிழ் நூல்களைக் கொண்டறியக் கிடக்கின்றது; அக்காலத்தில் மாத்திரமல்ல, இடைக் காலத்திலும் நல்வாழ்க்கைக்குரிய தமிழ்ப் பெண்களின மாட்சி போற்றத்தக்கதாயிருந்தது; வறுமையிற் செம்மையான வாழ்க்கையை இடைக்காலத்துப் பெண்களுட் மேற்கொண் டொழுகினுர்கள்; "தற்கொண்டான் வளத்தக்காள வாழ்க்கைத்துணை" என்று வள்ளுவர் வரையறுத்துக் கூறிய பிரகாரம் வாழ்பவர்கள்; தன் கணவனேரைத் தோளில் வைத்துக்கொண்டு ஏருந் துக்கலைப் பிணைத்து நடத்திக்கொண்டு போக, அவன் பிறகே ஏரு நிறைந்த கூடையைச் சுமந்துகொண்டு செல்லும் மடநல்லாரையும், பின்னர் மீண்டு தன் இல்லத்திற்கு வந்து சமையல் செய்து மத்தியானப் பொழுதில் உண்ண உணவும், உட்கொள்ள நீரும், வாயிலிட வெற்றிலை பாக்கு முதலியனவுங் கொண்டுபோய் வயலோரத்திலுள்ள நிழலிலே தம் கணவனை அன்புடனிருத்தித் தாம்பூலம் வழங்கி மீண்டு மகிழ்ச்சியோடு தன்னில்லத்திற்கு வந்து தான் ஆசாரம் பண்ணும் பெண்ணும், தோட்டத்திற்குத் தன் கணவனுடனும் பிள்ளையுடனும் போய், கணவன் துலா மிதிக்க, மகன் மடைமாறத் தான் தண்ணீரிறைக்கும் பெண்ணும், தங்காய்! இன்னும் எங்கள் நாட்டுப்புறங்களில் இருக்கிருர்கள்; இப்படிப்பட்ட உத்தமியே தன்னைக்கொண்ட கணவனுக்குப் பெருஞ்செல்வமாக அமைய, இப்பெண்ணுக்குச் சீதனம் எதற்கு? இப்படியான பெண்ணை வரைபவன் அவளைபொருட்டுச் சீதன முந்தர வேண்டுமென்று கேட்பானுயின் அவனை ஆணென்று சொல்லவொண்ணுது, அலியென்றே சொல்லவேண்டும்"

### "நல்லார்க்கும் பொல்லானு நாடு"

"ஆனல், தங்காய், இக்காலத்து மகளிர் நிலைமை பெரும்பாலும் அப்படிப்பட்டதன்று; இக்காலத்து வாலிபர் தமக்கு மணம் பேசுங் கன்னியரின் பெற்ருரிடத்துச் சீதனங் கேட்பது, தாம் அந்தச் சீதனப் பணத்தைக்கொண்டு இடாம்பீகமாகச் சீவியஞ்செய்யலாமென்ற நோக்கங்கொண்டல்ல; அந்த நோக்கத்தோடு சில வாலிபர்களிருந்தால் அவர்களைப் புறகடையாகக்கொள்ள வேண்டும்; பின் எதன் பொருட்டு அதிகசீதனங் கேட்கின்ருர்களென்ற காரணத்தைச்சொல்லுகிறேன் கேள்; இக்காலத்துள்ள காரியிற் பெரும்பாலார் அந்நிய நாகரிகத்தின்பாற்பட்டுத் தாங்கள் தமிழ்ப்பெண்கள் என்பதை அறவே மறந்து, "கண்ட பாவனையிற் கொண்டை முடிக்கத் தலைப்பட்டு" இடர்ப்படுகிருர்கள்; "தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத்துணை" என்ற பெரியார் வாக்கை அறவே மறந்து செட்டாற்றத் தொடங்கிக்கொண்டனர்; தம் கணவனுடைய மாசவருவாய் நூறு ரூபாவாக விருந்தாலும், அடுத்த வீட்டு ஆடவனின் மாசவேதனம் ஆயிரம் ரூபாவாக, அவனுடைய மனையாள் நடக்கும் உத்தமுறையில், வாழும் இடாம்பீகமுறையிற் தானும் நடக்கவேண்டும், தன் கணவன் தன்னை வைத்து நடத்தவேண்டுமென்று ஆசைப்படுகிருள்; அந்த ஆசை முற்றிப் பிடிவாதமாகிறது; அப்படித் தன் கணவன தன்னை இடாம்பீகமான முறையில் வைத்து நடத்தாதபட்சத்தில், நாயகனேடு முரண்படுகிருள்; இல்வாழ்க்கையிற் பிணக்கு வந்து புகுந்துவிடுகின்றது; இந்தப் பிணக்கைத் தவிர்க்கும் பொருட்டுக் கணவன் என்ன செய்கிருன்? தன் வருவாய் இப்படியான செலவிற்குப்போதாமையினுற் கடன் படத் தலைப்படுகின்ருன்; வருவாய்க்குமேற்படச் செலவுசெய்வோனைப் பற்றி எங்கள் ஒளவைப்பிராட்டி யென்ன சொல்லியிருக்கிருள்?

"ஆன முதலில்
அதிகஞ் செலவானுன்
மான மழிந்து
மதிகெட்டுப் — போனதிசை

தொடர்ச்சி 3-ம் பக்கம்

# ரேடியோ

## ❋ இசைத்தட்டு

**திருச்சி செவ்வாய் ஜூலை 24**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 டி பி கைலாசம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 உத்தரப் பள்ளிகளுக்கு 1 இசைவேலை* 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 இரு குரலிசை* 2 தமிழில் செய்தி 2 10 கான்சாஹிப் ஷஹீத்கான்* 2 15 உயர்தரப் பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 எம் பக்கிரிசாமி பிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 டி பி கைலாசம் பாட்டு 6 30 கிராமச்சமூச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 காரைக்குடி சாம்பசிவ ஐயர் வீணை காரைக்குடி முத்து ஐயர் மிருதங்கம் 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 எம் பக்கிரிசாமி பிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு.

**திருச்சி புதன் ஜூலை 25**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 திருப்பாம்புரம் என் சிவசுப்ரமணிய பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 உத்தரப்பள்ளிகளுக்கு 1 கதம்பம்* 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 இரு வயலின்கள்* 2 தமிழில் செய்தி 2 10 அனுகுல்தாஸ், குமாரி டோலிஸென் கோஷ்டி* 2 15 உயர்தரப் பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப் பள்ளிகளுக்கு 4 30 முடிவு

5 30 கிளாரினெட் ஆ இ சே வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 குரல்வகை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 இலைச்செல்வம் 7 45 மாகாண மின்சார சக்தி உற்பத்திப்பெருக்க திட்டம்: வி பி அப்பாதுரை —பேச்சு 8 சுதாராயணி நாடகம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 திருப்பாம்புரம் என் சிவசுப்ரமணிபிள்ளை பாட்டு 10 முடிவு.

**திருச்சி வியாழன் ஜூலை 26**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 சாட்டியக்குடி ஆர் மீனாக்ஷி சுந்தரம் அம்மாள் பாட்டு 8 ஆங்கிலத்தில செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 உத்தரப்பள்ளிகளுக்கு 1 குரல்வகை* 1 15 பெண் உலகம் 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 அலமேலுமங்காள்* 2 தமிழில் செய்தி 2 10 எச் எம் வி ஸ்டுடியோ வாத்யகோஷ்டி* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 எச் எஸ் மத்வாச்சார் கோட்டுவாத்யம 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்திலசெய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 காவடிச் சிந்து 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 நிலாகானம்* 8 எலைக்குப்பிடித்த கவிஞர் சி எம் பாலசுப்ரமணியம் —பேச்சு 8 15 ராகம், தானம், பல்லவி ஆலத்தூர் சகோதரர்கள் பாட்டு வி சுந்தரேசன் வயலின் குருமூர்த்தி சிவவடிவேலு பிள்ளை மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 சாட்டியக்குடி ஆர் மீனாக்ஷிசுந்தரம் அம்மாள் பாட்டு 10 முடிவு.

**திருச்சி வெள்ளி ஜூலை 27**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 காஞ்சிபுரம் பி ஞானசுந்தரம் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 உத்தரப்பள்ளிகளுக்கு 1 கதம்பம்* 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 மஹாராஜபுரம் விஸ்வநாதய்யர்* 2 தமிழில்செய்தி 2 10 முகம்மது கான் வீதார்* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 ராஜபாளையம் பி பெருமாள் நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள் கேட்டவை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 ஸ்டேஜ் விசேஷ நிகழ்ச்சி நாடகம் 7 45 சமதி தபால்பெட்டி 8 காஞ்சிபுரம் பி ஞானசுந்தரம் பாட்டு 8 30 குரல்வகை* 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 ராஜபாளையம் பி பெருமாள் நாகஸ்வரம் 10 முடிவு.

# பாராளுமன்றம்

கோப்பாய்ப்பகுதிப் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கத்தின் பேச்சு:-

இலங்கைப் பரிபாலனச் செலவுத்திட்ட விஷயமாகப் பாராளுமன்றக்கூட்டத்திற் சென்றவாரம் நிகழ்ந்த பேச்சில், திரு. கு. வன்னியசிங்கம் பின்வருமாறு தமிழ் மொழியிற் பேசினார்:-

"இப்போதைய இலங்கை அரசின் நிலைமையை யுத்தேசிக்குமிடத்து, இது உள்ளீடற்ற உட்கிய பாரைவோடுகூடிய ஒரு பெருமரத்தின் நிலையில் நிற்கின்றதெனலாம்; பொக்கேடுகூடிய மரம் எந்தநேரம் பெயர்ந்து முறிந்து விழுமென நிச்சயமாகச் சொல்ல முடியாது; அப்படியே இப்போதைய இலங்கைய பரிபாலன முறை எந்தநேரந் தவறுமென்பது சொல்ல முடியாது; இலங்கையரசினர் சிங்களத்தையும் தமிழையும் அரசபாஷைகளாக ஆக்கிவிடவேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்; ஆனால் "மனியோடர் போம்" (பணமனுப்புதற்காகிய மாதிரிப் பத்திரம்) முதலியன வெல்லாம் ஆங்கில மொழியிலும் சிங்கள மொழியிலுஞ் சேர்ந்து அச்சிடப்படுகின்றன; இவற்றிலே தமிழ்மொழியைக்காணோம்; மேலும் பாராளுமன்றத்து மந்திரிமார்சிலரும் அங்கத்தவரும் தமிழ்ப் பிள்ளைகள் தவறாது சிங்களத்தையுங் கற்கவேண்டுமென வற்புறுத்திப் பேசக் கேட்கின்றோம்: ஆனால் சிங்களப்பிள்ளைகளைத் தமிழையும் படிக்கும்படி சொல்லுவார் எவரையுங்காணோம்"

## அப்துல்லா அரசர் சுட்டுக்கொல்லப்பட்டார்

### அவரைக் கொன்றவனுங் கொல்லப்பட்டான்

ஜோர்தான் நாட்டு அரசராகிய அப்துல்லா பழைய ஜெருசலேம் நகரில் தம் சமயப்பள்ளிவாசலுக்கு வணங்குதற்குச் சென்றவிடத்தில், சென்ற வெள்ளிக்கிழமை (27-7-51) வாசலிற்பதிவிலிருந்து ஒருவனும் சுட்டுக் கொல்லப்பட்டார்; உடனே அரசருடைய மெய்காப்பாளர் அந்தக் கொலைகாரனைச் சுட்டுக் கொன்றுவிட்டார்களாம்; அப்துல்லா அரசன் பிரேதம் உடனே ஜெருசலேமிலுள்ள அம்மன் நகருக்கு ஆகாய மார்க்கமாகக் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டது; இறக்கும்போது அவரது வயசு 69; சென்ற 28 வருடகாலமாக அவர் ஜோர்தான் நாட்டு மன்னராயிருந்து அரசாண்டார்; நாடு அப்பநோமும் அரசனில்லாமலிருக்கவொண்ணுதென்ற காரணம்பற்றி அப்துல்லா அரசரின் இரண்டாம் மகனாகிய எமீர்நாயில பிரதியரசாக விளம்பரஞ் செய்யப்பட்டார்; முடிக்குரிய மூத்தமகன் அந்த நேரத்தில் அகதில்லாமையினுலேயே இந்த ஒழுங்குசெய்யப்பட்டதாம்; கொன்றவருடைய பெயர் முஸ்தப்பா சுட்சிறிஅஷு; சென்ற 1948-ம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையில், இரண்டு அரசர்களும் ஒரு பிரசாதிபதியும், 4 மந்திரிமாரும் முாசகுமாரர்களுமாகப் பல பிரமுகர்கள் அநியாயமாகக் கொலைசெய்யப்பட்டனராம்

## உலகம் பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

எல்லார்க்குங் கள்ளனுய்
எழ்பிறப்புந் தீயனுய்
நல்லார்க்கும் பொல்லனும் நாடு"

என்றல்லவா சொல்லப்பட்டிருக்கிறது! கல்யாணஞ் செய்தபின் தாம் இந்த நிலையை அடைந்துவிடாமல், மரியாதையோடு இருக்கவேணும், கடன்காரனென்ற அவப்பேர் கேட்கவொண்ணுது, சந்தி பெருககேர்ந்தாற் பொருளில்லாமல் திண்டாடவேண்டி நேரிடும் என்னுபவைகளை யெல்லாம் உத்தேசித்தே, என் அருமைத் தங்காய், இக்காலத்துள்ள வாலிபர்கள் தாம் வரையவிரும்பும் கன்னிகைக்குத் தக்க சீதனம் வேண்டும், அறிவிற்சாகிய நூற்கல்விய றிவு தவனிடத்திலில்லாபயினும் எதும் சிவஞேபாயத்திற்காகிய கல்வியறிவு பரீட்சைச் சித்தி வேணுமென்று கேட்கிறார்கள்; இக் ஞாயங்களை யோசித்தே, என் தங்காய், நானும் நன்கு படித்த கன்னிகையை, இல்லையேற் சீதனம் பொருத்த பெண்ணைக் கல்யாணஞ் செய்ய வேண்டுமென நோக்கங் கொண்டேன்" என்று சொல்லி முடித்தான் பத்மநாதன்.

(வரும்)

## ஆசிரியர் தேவை

வியாவிற் சைவபரிபாலன வித்தியாலயத்தில் சிரேஷ்ட வகுப்புகளில் பெண் குழந்தைகள் மாத்திரமே கல்வி கற்கிறார்கள். அவர்களுக்குக் கல்வி கற்பிக்கத் தகுந்த ஆசிரியை 1—9—51 தவக்கம் தேவை. 15-8-51-க்குமுன் விண்ணப்பங்கள் கிடைத்தல் வேண்டும்.

காரைநகர் 23-7-51.   இ. நாகலிங்கம் மனேஜர்

M 60 24, 27-7-51.

# : வானவில் :

○ கலாமந்திரன் ○

● திம்மாகமணத் துள்ள மூதூரைச் சேர்ந்த கே. தம்பிராஜா என்பவர் தமது மனைவி பரமேசுவரியைத் துப்பாக்கியாற் சுட்டுக்கொன்றார் என்ற வழக்கு இப்பொழுது மட்டக்களப்பு உயர்தர நீதிமன்ற விசாரணையில் எடுக்கப்பட்டிருக்கிறதாம்; இதிற் பரமேசுவரியின்தாய் சிவகாமிப்பிள்ளை சொன்ன சாட்சியம்: எங்கள் மகளை இக்த மாப்பிள்ளைக்கு இற்றைக்கு மூன்றரை வருடங்கட்குமுன் முறைப்படி கல்யாணஞ் செய்து கொடுத்தோம்: நாங்களிருக்குமூர் திருக்கோணமலையாகும்; முதல் என் மூத்த மகளைத்தான இந்த எதிரிக்குக் கல்யாணம் முடித்துக் கொடுத்தோம்; அந்தப் பெண்ணிறந்து 8 மாசங் கழித்தபின்பே அவள் தங்கையாகிய பரமேசுவரியைக் கல்யாணஞ் செய்து கொடுத்தோம்; சென்ற ஆண்டு என் மகள் கருப்பவதியாகவிருந்தமையினுல், நான் அவள் கணவன் வீட்டிற்குப் போய்ப் பிரசவகாலத்திலே என வீட்டிலே வைதது பாராமரிப்பதற்காக மகளைக் கூட்டிக்கொண்டு வந்தேன்; சென்ற ஆண்டு யூலாய் மாசத்திலே பிள்ளை பிறந்தது; பிள்ளைப் பெற்று 21 நாட் கழிந்தவுடன் புருஷன் தாயையும் பிள்ளையையும் தன வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போவதற்காக எங்கள் வீட்டிற்கு வந்தார்; வந்து மோட்டாரதத்தில் தம் மனைவியைப் பிள்ளையையுங் கொண்டு புறப்படச் சொன்னபோது எனது கணவர் மகளுக்கு இன்னமும் பூரணசுகமாகவில்லையெனவும், ஆனதால் இப்பொழுது கூட்டிக்கொண்டு போகவியலாதென்றுஞ் சொன்னர்; அப்பொழுது எதிரி மகளைப் பார்த்து "நீ இப்பொழுதே குழந்தையுடன் புறப்பட்டு என்னுடன் வாராதிருந்தால் நான் உனக்கு நல்ல பாடம் படிப்பிப்பேன்" என்று சொல்லி வெருட்டிவிட்டுப் போய்விட்டான்; பின் சிலநாட்செல்ல, எதிரி எங்கள் வீட்டிற்கு நடுச்சாமத்திலேவர, நான் கண்டு சத்தமிட்டேன்; எதிரி ஏதோ போட்டுவிட்டு ஓட்டம்பிடித்தார்; எறிந்தபொருள் ஏதோ குளிசம் என்று சொன்னார்கள்; கொல்லப்பட்ட என் மகள், இந்த எதிரி தன்னை அநியாயமாக நடத்துவதினுல், தான இவருடன் வாழமுடியாதென்று நீதிமன்றத்திற்கு மனுப்பண்ணினுள்; அந்த மனுவை நீதிமன்றம் ஏற்கவில்லை, பின்னர்க் கலியாணப் பதிவைத் தள்ளுதற்காகிய வழக்குத் தொடரப்பட்டது; ஜனவரி மாசம் 9-ந் திகதி குறித்த வழக்கு விசாரணை செய்வதாகத் தவணை யிடப்பட்டது: அதற்கு இரண்டுநாள் முந்தி எதிரி என் மகளைத் துப்பாக்கியாற்சுட்டுக்கொன்றுவிட்டான்".

● கதிர்காம உற்சவ காலத்தில் தீ மிதித்து நடந்த ஒருவர், அந்த நெருப்பில் நின்றுகொண்டும் ஐக்கிய தேசியக்கட்சி ஆதிக்கம் ஒழிக என்று ஓலமிட்டாராம்.

● பண்டாரக்கொடையில் வசித்த குஸ்மாவதி யென்னும் 7 வயதுச் சிறுமியையும் இன்னொரு சிறுமியையும் வீட்டிலிருக்கவிட்டு அவர்களுடையதாய் ஏதோ காரியார்த்தமாக வெளியிற் போய்விட்டாளாம். குஸ்மாவதி பக்கலில் ஒரு "பீடி" கிடக்கக்கண்டு அதனை யெடுத்துப் பற்றவைத்துப் புகைக்க விரும்பி, தனக்கயலிலிருந்த போத்தல் விளக்கைக் கையிலெடுத்துப் பீடியைப் பற்றவைக்கும்போது, விளக்குளிருந்த மண்ணெண்ணெயிற் சில துளி அவளுடையிற் சிந்த, அதனுல் நெருப்புப்பற்றி உடனேயெரிய அச்சிறுமியும் உடனே எரிந்து மாண்டாளாம.

● "இந்தத் தீர்வையைக் குறைத்தால் அந்தத் தீர்வையையுங் குறைக்கலாம்" என்று இப்பொழுது ஒரு சந்தர்ப்பத்தில் இலங்கை யரசினர்க்கு இந்திய அரசினர் தெரிவிக்கலாயினார்; திருவிதாங்கூர் அரசினர் யாழ்ப்பாணத்திலிருந்து அந்நாட்டிற்கு ஏற்றுமதிசெய்யும் புகையிலைத் தீர்வைக்கு, அங்கு இறக்குமதித் தீர்வையை மிகவும உயர்த்திவிட்டனர்; இதனுல் யாழ்ப்பாணத்து மக்களின் பிரதான விவசாயத் தொழிலாகிய புகையிலைச் செய்கையும் புகையிலை வியாபாரமும் பெரிதுங் குன்றத் தலைப்பட்டுவிட்டன என்பதை இங்குள்ள மக்கள் நன்கறிவர். குறித்த இறக்குமதித் தீர்வையைக் குறைத்து விதிக்கும்படி இலங்கையரசினர் பலமுறையும் திருவிதாங்கூர் அரசினரைக் கேட்டபோது அவர்கள உடன்பட்டிலர்; ஆனால் இப்பொழுது மாத்திரம் அந்த அரசினர் இந்த அரசினரை ஒரு கேள்வி கேட்கின்றனர். கேள்வியென்ன? இந்தியாவிலிருந்து காலந்தோறும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படும் "பீடி"யின் இறக்குமதித்தீர்வையை இலங்கை யரசினர் குறைத்தால், நாங்களும் அதற்கேற்ப உங்கள் புகையிலை இறக்குமதித் தீர்வையை இங்கே குறைக்கலாம்" என்பதே. இதனையிட்டு இலங்கையரசினர் விரைவில் யோசிக்கப்போகிறூர்களாம.

# மகளிர் மன்றம்

## சேயைப் பேணுதல் தாயின் தலையறம்

தாயைப்போற் பிள்ளை என்று பலர் சாதாரணமாகக் கூறுவதை நாம் காதாரக் கேட்டிருக்கிறோம். இப்பழமொழியைச் சிறிது ஆழ்ந்து நோக்குமிடத்து அதனுட் புதைந்து கிடக்கும் பல கருத்துக்கள் எமக்குத் தெள்ளிதிற் புலனாகும்.

உலகத்தில் உயர்பண்புகளுளெல்லாம் தாய்மையே சிறந்ததாகும். எந்த ஒருபெண் தன் தாய்மைக் கடமைகளைச் சரிவரச் செய்கிறாளோ, அவள் தன் குடும்பத்திற்கு மாத்திரமல்ல, சமுதாயத்திற்கே பெருந்தொண்டு செய்பவளாகிறாள். மக்களிடம் அன்புடனும் இன்புடனும் வாழவேண்டுமாயின் தாய்மார்கள் ஒவ்வொருவரும் தம் பொறுப்பையுணர்ந்து தம் கடமைகளைச் சீரிய முறையில் ஆற்றுவதற்கு முன்வரவேண்டும். இதன் உண்மையை இங்குச் சற்று ஆராய்வோம்.

ஒரு சிசுவினது அம்சங்களெல்லாம் தாயின் அவயவத்திலேயே ஆரம்பித்துப் பூரணமாகிறது; சிசுவின் அங்கங்களுக்கு வேண்டிய உபகரணங்களும் தாயின் உதிரத்திலிருந்தே வரவேண்டும். இச்சிசுவினிடம் உதிரமூலம் வந்துசேரும் உபகரணங்களில் அத் தாயின் தன்மையும் பதிந்து மக்களுடலிற் புகுகின்றது. இத் தன்மைகளே பின்னர் அக்குழந்தைகளின் உடலோடு வளர்ந்து அவர்களைப் புத்திமான்களாகவும், பெலவான்களாகவும், இல்லையேல் அறிவிலிகளாகவும், பிணியாளர்களாகவும் ஆக்கிவிடுகின்றன. தாயின் தன்மையானது, சரீரத்தினது தன்மை, ஆத்மாவினது தன்மையென இருவகைப்படும். சரீரத்தின் தன்மை தாயின் தேகாரோக்கியம் அழகு முதலியவற்றிலே தோன்றும். ஆத்மாவின் தன்மையோ அவள் குணம் நடத்தை முதலியவற்றிலேதெரியவரும்.

தாயினது உதிரம் இருக்கும் நிலைமைக்குத் தக்கதாகவே அவள் உடற்றன்மையும் இருக்கவேண்டுமென்பதை எவருமறிவர். தாயின் இரத்தமே குழந்தையையும் வளர்க்கிறது. ஆகவே பலவிதப் பிணிகளாலும் பீடிக்கப்பட்டிருக்கும் தாயின் உதிரத்திற் பதுங்கியிருக்கும் அசுத்தமும் வியாதிகளும் சிசுவின் உடலுக்குஞ் செல்கின்றன. இப்படியாகச் சிசுவின் உடலுக்குட் செலுஞ் சத்துக்கள் குறைவுள்ளவைகளாயுமிருப்பின் அவைகள் குழந்தை உடலிற் சென்றபின்பும் குறைவுள்ளவைகளாயிருந்து அதற்கு நோயையும் உபத்திரவத்தையுமுண்டாக்கும்.

குழந்தை பிறந்தபின்பும் தாய்ப்பாலையே உண்டு வளருகின்றது. இங்கும் உதிரமே பாலாக மாறிக் குழந்தையை வளர்க்கிறது. இத் தாய்ப்பாலினூடாக மேலும் மேலும் தாயின் தன்மை குழந்தை உடலிற் பரவுகிறது. தாவர உணவுகளை மாத்திரம் உண்ணும் தாய்மாரின் பிள்ளைகளின் வாயில் மாமிசத்தை வைத்தால் உடனே அதற்கு அருவருப்புத் தோன்றிவிடும். தாயின் இரத்தத்தில் என்ன பொருட்கள் சேர்ந்திருக்கின்றன என்பதை அறிந்தால் குழந்தையை வளர்க்கும் பொருள்களையும் எளிதிற்கண்டு கொள்ளலாம். தாய்க்குஞ் சேய்க்கும் உள்ள இவ்வொற்றுமைகள் யாவரும் அறிந்தவைகளே. தலைவலி, வயிற்றுவலி முதலிய பல நோய்கள் உண்டாவதற்குக் காரணம் சரீரத்தில் ஏதோ ஒரு குறைவேயாகும். இவ்வியாதிகள் பாலனையும், குழந்தைகளையும், பீடிக்குமாயின் அவர்கள் தங்கள் ஆயுள் பரியந்தம் உபத்திரவத்தை அனுபவித்தே தீரவேண்டும். குழந்தை பிறந்தபின் தாயானவள் எவ்வளவு சிரமப்பட்டுப் பராபரித்தபோதிலும் அவ்வியாதிகள் ஒருகால் தோன்றிய பின் அவைகளை அறவே நீக்குவது அரிது. ஆதலினாலேதாய்மார்கள் தங்கள் சுகத்தைப்பேணினாலன்றே தங்கள் மக்களையும் காப்பாற்ற முடியும்.

சிலவேளை தாய்மார் தேகபலமுள்ளவர்களாயிருந்தும் பிள்ளைகள் பலவீனர்களாக அமைந்துவிடுகிறார்கள். இதற்குக் காரணமென்ன? சில வியாதிகளுக்குரிய அறிகுறிகள் தாய் உடம்பில் இரத்தத்திலே தோன்றிப் பதுங்கி வெளியே தோன்றுமலிருந்திருக்கக்கூடும். இவை குழந்தை உடம்பிற் புகுந்து இன்னலை விளைத்தனவாகலாம். இனி, தாய்மார் வயிற்றிற் பிள்ளையிருக்கும் போது மிதமிஞ்சிய வேலை செய்வதால் அவர்கள் சிசுவின் வளர்ச்சிக்கு வேண்டிய சத்துக்களையும் மற்றைய விஷயங்களிற் செலவழித்து விடுகிறார்கள். ஓயாத வேலையினாலும் தீராத கவலையினாலும் தாயினது சத்துக் குறைந்து தளர்ச்சியடைகிறது. அவ்விதமே அக்குழந்தைகட்குஞ் சத்துக் குன்றி நோயுண்டாகிறது. ஆகவே தாய்மார் தங்கள் சரீர நிலைமையைச் சற்று அவதானிப்பார்களாயின், அவர்கள் தங்கள் பிள்ளைகளின் அவயவத்திற்கு வல்லமையையும், சுறுசுறுப்பையும் உண்டுபண்ணுவார்கள். அன்னையென்றழைக்கப்பட ஆவலுடன் காத்திருக்கும் ஒவ்வொரு பெண்ணும் தம் மதலைக் குழந்தைகளின் பொருட்டுத் தங்கள் தேகசுகத்தைப் பேணுவது மிக்க ஆவசியகம்.

இதுவரை தாயின் சரீரத்தன்மையையும் அதனாற் போஷிக்கப்படும் சிசுவின் சரீரத்தன்மையையும் எடுத்துக்காட்டினோம். இனி, தாயினது ஆத்மாவின் தன்மைக்குத்தக்கதாக அவள் குழந்தைகளின் சுபாவம் எப்படியமையும் என்பதைப் பார்ப்போம். சிசு உற்பத்தியாகியிருக்கும் பொழுது தாயினது ஆத்மாவின் தன்மை எப்படியிருக்கின்றதோ அப்படியே அவளது குழந்தையின் சுபாவமும் அமைந்துவிடுகின்றது. இதை நாம் அனுபவவாயிலாகவே அறியலாம். இதற்கு உதாரணம் வருமாறு: ஒரு குடும்பத்திற் சில காலம் செல்வம் கொழித்தது. அக்காலத்தில் அவர்களுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. காலஞ் செல்லச் செல்ல அக்குடும்பத்திற் பெரு கஷ்டங்கண்டு தாயானவள் அதிக மனவருத்தம் அடைந்தாள். அந்த நேரத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. இவ்விரு பிள்ளைகளும் தேகாரோக்கிய முள்ளவர்களாய் வளர்ந்தபோதிலும், இவர்கள் குணங்களில் அதிக வித்தியாசந் தோன்றியது. மூத்த சிறுவனே வெகு சுறுசுறுப்புள்ளவனாகவும் கல்வியிற் சிறந்தவனாயும் விளங்கினான். இவன் பிறமாணுக்கரைவிடப் புத்திகூர்மை யுள்ளவனாயிருந்தான். பெண்ணோ ஆரம்பமுதல் தன்னம்பிக்கை யற்றவளாய்க் காணப்பட்டாள். மிகச் சோம்பலும், எளிதில் அதைரியப்படக்கூடியவளுமாயிருந்தாள். வெறுப்பு மனப்பான்மையே அவளிடம் அதிகமாகக் காணப்பட்டது. பிள்ளைகளின் வேறுபட்ட குணங்களுக்குத் தாயின் அவ்வப்போதிருந்த ஆத்மதன்மையே காரணமாயிருந்தது என்பது இதனாலே தெளிவாகிறது.

மக்களுடைய யோசனையும் புத்தியும் பல்வகையாகச் செல்கின்றன. ஆயினும் எல்லோரும் ஒரே வழியைப் பின்பற்றவில்லை. ஒருவன் வானசாஸ்திரத்தில் நிபுணனாகின்றான், இன்னொருவன் தத்துவத்திலும், மற்றவன் வேதாந்தத்திலும் நிபுணனாகின்றான். இவ்விதமாக மனிதரின் புத்தியும், ஆலோசனையும் வெவ்வேறு வழிகளில் நோக்குவதற்குக் காரணமென்ன? தாயின் ஆத்மதன்மையும், விருப்பமுமே மக்களின் மனத்தில் வேரூன்றிப் பதிகின்றன. குறுகிய மனப்பான்மையுடைய ஒரு தாயினிடத்தில் விரிந்த மனப்பான்மையுடைய சிறுவர் பிறப்பர் என எதிர்பார்க்கமுடியாது. ஒவ்வொரு தாயும் தனக்கிருக்கும் விருப்பு வெறுப்புக்களையே தன் குழந்தையின் மனத்திற் பதிக்கின்றாள். ஆயின் சிறந்த மக்களை சமுதாயத்திடைத் தோற்றச்செய்ய வேண்டுமாயின் அதற்குரியபொறுப்புத் தாயிடமே அமைந்திருக்கிறது.

இவ்வுலகத்தில் ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்கும் சுகதுக்கங்கள் பெரும்பாலும் அவன் சரீர அமைப்புக்கும் ஆத்ம அமைப்புக்குந் தக்கதாகவேயிருக்கும். இவ்விரு அமைப்புக்களையும் பிள்ளைகள் பெரும்பாலும் தாய்மாரிடமிருந்தே பெறுகிறார்கள் என்பதை முன்னர் எடுத்துக்காட்டினோம். தாய் எந்நிலையிலிருக்கிறாளோ அதற்குத்தக்கதாகவே அக்குழந்தையுந் தோன்றுகிறது. மகவின்மீது தாய்க்கிருக்கும் வல்லமை எவ்வளவு தூரம் வியாபித்திருக்கிறதென்பதை நாம் அளவிடமுடியாது. ஆதலால் தாய்மார்களே! இறைவன் உங்களிடம் கொடுத்திருக்கும் இப்பெரும் பொறுப்பையுணர்ந்து உயர் பண்புகள் நிறைந்த மக்களினத்தைத் தோற்றுவிப்பதே உங்கள் தலையறமாகும்.

—யாழ்ப்பாணம்
இந்துமகளிர் கல்லூரி.

## சைவக் காப்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி

...தச் செய்வதும் எங்கள் ஒவ்வொருவருக்கும் உரிய கடனாகும். இத்தக் கடனை முக்கியமாகக் கையாளவேண்டியவை சைவப் பள்ளிக்கூடங்களேயாம். சைவப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் தங்கள் சாதனையினாலும் போதனையினாலும் மாணாக்கர்களிடையே சைவப்பற்றை வளர்த்துச் சைவ ஆசாரங்களை அனுசரிக்கச் செய்ய வேண்டும். ஒவ்வொரு சைவப் பள்ளிக்கூட மாணாக்கனும், சைவத்தைப் பாதுகாப்பதிலே ஆவலுடையவனாய், சைவத்திற்கு வரும் இடர்களைத் தீர்க்கும் ஆண்மையும் வீரமுமுடையவனாதல் வேண்டும். ஒவ்வொரு சைவப் பள்ளிக்கூடமும் அங்குள்ள மாணாக்கருக்குள்ளே, சைவப்பற்றும் சிறந்தவர்களைச் சேர்த்துச் "சைவத் தொண்டர் சபை" யொன்றை நிறுவுதல் வேண்டும். இச்சபைக்குத் தலைமையாசிரியரும் உதவியாசிரியர்கள் யாவரும் முக்கிய அங்கத்தவராதல் வேண்டும்.

புண்ணியநாச்சி மட தருமம்

நெல்வயல் குத்தகைக்கு

விண்ணப்பப் பத்திரம்

மறவன்புலோ பகுதியில் புண்ணியநாச்சி மட தருமத்திற்குரிய நெல் வயல்கள் குத்தகைக்குக் கொடுபட இருக்கின்றன. குத்தகையைப்பற்றிய விபரங்களை யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலை மனேஜரிடம் நேரில் அறிந்து கொள்ளலாம்.

இந்த ஜூலாய் மாசம் 31-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கிடையில் மேற்படி விண்ணப்பப் பத்திரங்கள் சைவப்பிரகாச யந்திரசாலை மனேஜரிடம் வந்துசேர வேண்டும்.

கா. சண்முகம்
காரியதரிசி
சைவபரிபாலன சபை.

யாழ்ப்பாணம்
17—7—51

M 56 17, 20 24, 27—7—51.

வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

திறமான தேக்கமரங்கள்

பல தினிசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
74 ஆஸ்பத்திரி ரோட்
யாழ்ப்பாணம்

Std 2

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietor: the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarponnai, Jaffna, on Tuesday July 24. 1951